**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 13/2016**

**Deposition of Witnesses for PW1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு.தங்கவேல் | Caste: |
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 22.04.2025

**எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞரும் ஆஜர்.**

## முதல் விசாரணை

நான் தற்போது லால்குடி காவல் நிலையத்தில் இருந்து உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 30.04.2020ல் பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 22.12.2015ம் தேதி துறையூர் காவல்நிலையத்தில் பணியில் இருந்தபோது காவல் ஆய்வாளர், நான் மற்றும் மு.நி.கா.செல்லதுரை, வாகன தணிக்கைக்காக துறையூர் பைபாஸ் ரோட்டில் உள்ள சுரத்தூர் பிரிவு ரோடு அருகில் மதியம் சுமார் 1 மணியளவில் தணிக்கை செய்யும்போது இருசக்கர வாகனத்தில் வந்தவர்களை நிறுத்தி சோதனை செய்தபோது பெட்ரோல் டேங்க் கவரில் பிளாஸ்டிக் கவர் பொட்டலம் ஒன்று இருந்தது. அதை ஆய்வாளர் அவர்கள் என்ன என்று கேட்டதற்கு சரிவர சொல்லாததால் அவர் அந்த பையை திறந்து பார்க்க அதில் கஞ்சா வாடை வந்தது. எங்கிருந்து வாங்கி வந்தீர்கள் என்று கேட்டதற்கு, அதை அவர் சொல்ல மறுத்துவிட்டார். பின்பு என்னை காவல் நிலையம் சென்று தராசு, படி கல், SHO சீல் காக்கி கவர், நூல் ஆகியவற்றை எடுத்து வர உத்தரவிட்டார். நான் சென்று எடுத்து வந்தபின்பு அதை தலா 200 கிராம் எடை போட்டு SHO சீல் வைத்து, மீதமுள்ள 1.600 கிகி பையில் வைத்து SHO சீல் அங்கு மகஜர் தயார் செய்து நானும், மு.நி.கா. செல்லதுரை ஆகியோர் கையொப்பம் செய்தோம். அந்த மகஜர் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-

ஆய்வாளருக்கு தகவல் எத்தனை மணிக்கு வந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. திரேக பரிசோதனை செய்தது ஆய்வாளர் தான். நான், செல்லதுரை மேற்படி எதிரியை திரேக பரிசோதனை செய்யவில்லை. நான் எந்த ஆவணங்களையும் எழுதவில்லை. திரேக பரிசோதனை

செய்யப்பட்டபின்பு சோதனை சம்மத கடிதம் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரியை கைது செய்தது குறித்து கைது அறிவிப்பு  தயார் சாட்சிகளாகிய எங்களிடமும், எதிரிகளிடமும் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். கைது மற்றும் கைப்பற்றுதல் குறித்து பிரிவு 57 படியான விரிவான அறிக்கை தயார் செய்து ஆய்வாளர் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மகஜரில் SHO மாதிரி சீல் எதுவும் வைக்கவில்லை என்றால் சரிதான். மகஜரில் எதிரியின் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். தனி நபர் சாட்சிகள் யாரும் மகஜரில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் இல்லை என்றும் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரியிடமிருந்து கைப்பற்றவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து அனைத்து ஆவணங்களிலும் கையெழுத்து செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்த எந்த போதை பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.